Registered as a Newspaper

புதன்பொய்கை

# உதயன்

சுடர் : 41
கதிர் : 98

புதன்கிழமை
04 மார்ச் 2026

மாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



# மத்தியகிழக்குப் போரால் பேரழிவுகள் உருவாகும்!

## மோசமான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார் என்கின்றார் ஜனாதிபதி

**கொழும்பு, மார்ச் 4**

**மத்திய கிழக்குப் போரால் நிச்சயம் பேரழிவுகள் ஏற்படும். ஆதலால், பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள பதற்றம் நியாயமானது. எனினும், அரசாங்கம் என்ற வகையில் மோசமான விடயங்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.**

»15

ஆவளையில் இருந்து

## கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் மாயம்

### ஐந்தாவது நாளாக தொடரும் தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஆவளை கடற்கரையில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற இரண்டு மீனவர்கள் படகுடன் காணாமற் போயிருந்த நிலையில், ஐந்தாவது நாளாக

»15

யாழ். மத்தி - சென்.ஜோன்ஸ்

## வடக்கின் போர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான, 119ஆவது 'வடக்கின் போர்' கிரிக்கெட்

»15

மத்திய கிழக்குப் போர்

## ஸ்ரீலங்கா நாடாளுமன்றில் இரண்டு நாள்கள் விவாதம்



கொழும்பு, மார்ச் 4

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில், ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் அவசியம் என்று எதிர்க்

»15

யாழ். நகரப்பகுதி

## நிரப்பு நிலையங்களுக்கு கூடுதலான எரிபொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் நகரப்பகுதி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்று கூடுதலான எரிபொருள்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

»15

## திருத்தந்தை லியோ இலங்கைக்கு வருகின்றார்?

கொழும்பு, மார்ச் 4

திருத்தந்தை லியோ விரைவில் இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தாலிக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை

»15

முரசத்து முரளி

"அங்க சண்டை முடிஞ்சாலும் இஞ்ச வரிசை குறையாது கண்டியளோ"

சட்டவிரோத இறைச்சிக்காக

## மாடு கடத்திய இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 4

சட்டவிரோத இறைச்சிக்காக மாடு கடத்திய இருவரை, வெற்றிலைக்கேணி பகுதியில் வைத்து மருதங்கேணி பொலிஸார் நேற்றுமுன்தினம்

»15

யாழ்ப்பாணத்துக்கு

## நான்கு நாள்களில் மட்டும் ஏழரை லட்சம் லீற்றர் பெற்றோல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்துக்கு கடந்த நான்கு நாள்களில் மட்டும் 7லட்சத்து45ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக, மக்கள் பெற்றோலைக் கொள்வனவு செய்வ

»15

afc 7 SERIES PREMIUM நிலையான வைப்பு

37 மாதங்கள்
மாதந்தோறும்
12.75% வருடாந்த வட்டி மூத்த குடிமக்களுக்கு
A.E.R. 13.52%

4 மாதங்கள்
முதிர்ச்சியின்
9.25% வருடாந்த வட்டி விகிதம்
A.E.R. 9.54%

இலங்கையின் முன்னோடியான முக்கோட்பாட்டு இலக்கையுடைய நிதி நிறுவனம்

70 வருட கால நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மையுடன், எலாயன்ஸ் பினான்ஸ் நிலையான வைப்பில் முதலீடு செய்யுங்கள்.

DOOR-STEP SERVICE

PEOPLE • PLANET • PROFIT

1321

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
1956 இல் இருந்து
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4364 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 08 23 41 46 |
| விசே எழுத்து | I |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1431 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 25 35 56 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0390 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 5 6 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2470 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 31 35 37 71 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6122 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 9 7 3 0 4 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2152 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 21 28 54 71 |
| விசேட எழுத்து | Y |

**சுப துவசக்**

| | |
|---|---|
| திகதி | 03.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0238 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 11 29 |

# பாதுகாப்பைப் பேணுவதற்கு முப்படையினருக்கும் அழைப்பு

## விசேட கட்டளையைப் பிறப்பித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 4

**பொதுமக்களின் பாதுகாப்பைப் பேணும் நோக்கில், நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய முப்படையினரையும் அழைப்பதற்கான விசேட கட்டளையை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார் என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.**

பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமையவே இந்த விசேட ஆணை பிறப்பிக்கும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டின் அமைதி மற்றும் சட்ட ஒழுங்கைப் பராமரிப்பதில் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினர் நாடளாவிய ரீதியில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (எ-இ)

**Super Ball (DLB)**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | 3096 | H | 04 36 47 50 |

**சனிதா (DLB)**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | S | 16 35 46 71 | 5257 |

**SASIRI (DLB)**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | 0926 | 15 39 41 |

**லக்ன ராசி (DLB)**

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | | 10 47 51 54 | 4808 |

**KAPRUKA (DLB)**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | F | 09 | 12 38 65 73 | 2272 |

**அத கோடிபதி (DLB)**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | D | 26 30 32 56 | 2922 |

## விசேட சுற்றிவளைப்புகளில் 630 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 4

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 630 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுற்றிவளைப்புகளில் 31,076 பேர் சோதனைக்குட்பட்டுத்தப்பட்டுள்ளதுடன், நேரடியாகக் குற்றங்களுடன் தொடர்புடைய 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிடியாணைகளுக்கமைய 248 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 157 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 159 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 39 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)



## எகிறுகின்றது தங்க விலை!

கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் நேற்றுத் தங்கத்தின் விலை 15 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 93 ஆயிரத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

24 கரட் தங்கத்தின் ஒரு கிராம் 53,125 ரூபாவுக்கும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராம் 49,125 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



## பேருந்துவிபத்து; 10 பேர் காயம்!

பொலநறுவை, மார்ச் 4

ஹபரணை - பொலநறுவை வீதியின் மின்னேரியா பகுதியில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

டிராக்டர் வாகனம் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

காயமடைந்தவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## கொக்குவில் இந்துவில் வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தும் 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கான அட்டவணை தயாரித்தல் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலை பொறுப்பானவர்கள் போட்டி அட்டவணை தயாரித்தல் நிகழ்வில் கலந்துகொள்ளு... மாறு வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ச-422)



## தடையின்றி நடக்கின்றது எரிபொருள் விநியோகம்!

கொழும்பு, மார்ச் 4

தற்போது எரிபொருள் விநியோகம் சீராக நடைபெறுகின்றது என்று இலங்கை கனிம எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ஏ.எஸ். டி.எஸ். ராஜகருண தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் சிறிய அளவிலான தட்டுப்பாடுகள் காணப்பட்டாலும், சந்தைக்குத் தேவையான அளவு எரிபொருள் தாராளமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு எரிபொருள் நிரப்புநிலையத்திலும் தட்டுப்பாடோ அல்லது நீண்ட வரிசைகளோ ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. தேவையற்ற அச்சம் காரணமாக மக்கள் எரிபொருளைச் சேமித்து வைக்கவேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கின் போரால் இலங்கை பாதிப்படையும்!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 4**

**மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால், இலங்கையில் எரிபொருள் விலை உயரும் அபாயம் உள்ளது. இது ஏற்கனவே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்கும். இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான சந்தை வாய்ப்புகள் பாதிக்கப்படும். இதனால் குறிப்பாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது. வான்வழிப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் தமது இலங்கைக்கான பயணங்களை இரத்துச்செய்து வருகின்றனர். இது ஹோட்டல் துறையை கடுமையாகப் பாதித்துள்ளது. வளைகுடா நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் தடைப்படும் சூழல் உருவாகியுள்ளது. இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே அரசாங்கம் மெத்தனமாகச் செயற்படாமல் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (ச–இ)

## இலங்கைப் பெண் இஸ்ரேலில் காயம்

கொழும்பு, மார்ச் 4

வடக்கு இஸ்ரேல் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில், அங்கு பணிபுரியும் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப்பணிப்பெண் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காயமடைந்தவர் கடவத்தையைச் சேர்ந்த 43 வயதுடையவராவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## போதைப்பொருள்களுடன் பெண்கள் இருவர் கைது


கொழும்பு, மார்ச் 4

வெலிவேரிய மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது, ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களுடன் இரு பெண்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து, மற்றுமொரு பெண் கைதுசெய்யப்பட்டார்.

60 மற்றும் 45 வயதுடைய பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

போதைப்பொருள் வியாபாரத்தின் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 410,470 ரூபா பணத்தொகையும் அவர்களிடம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## குஷ் போதையுடன் ஒருவர் சிக்கினார்

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய வருகை முனையத்தில் குஷ் ரக போதைப்பொருளுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-இ)

## எரிபொருள் பதுக்கிய தொழிலதிபர் கைது

கொழும்பு, மார்ச் 4

பெற்றோலைச் சேமித்து வைத்திருந்த பேருவளை, வலத்தர பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பேருவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவலின் பேரில் நடத்தப்பட்ட சோதனையின் போது பிளாஸ்ரிக் கொள்கலனில் பெற்றோலுடன் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு தாதியொருவர் கொலை!

**கேகாலை, மார்ச் 4**

**கேகாலை அரநாயக்க பகுதியில் தாதியப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அரநாயக்க மருத்துவமனையில் கடமையாற்றும் 35 வயதுடைய தாதி ஒருவரே உயிரிழந்துள்ளார்.**

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தாக்குலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரித்துள்ளனர். (ச-இ)



## சிவனொளிபாத வனத்தில் தீ

கொழும்பு, மார்ச் 4

மஸ்கெலியாவில் உள்ள கிளேன்டில் தோட்டத்தில் உள்ள ஒரு வனப்பகுதியிலும், கார்ட்மோர் சொந்தமான சிவனொளிபாத மலை வனப்பகுதியின் மலைத் தொடரிலும் நேற்றுமுன்தினம் இரவு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. கடும் வரட்சியான வானிலை மற்றும் அந்தப் பகுதியைப் பாதிக்கும் காற்றுக் காரணமாக, சுற்றியுள்ள பகுதிகளுக்கும் தீ வேகமாகப் பரவுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக விரட்டும் நோக்கில் ஒரு குழுவாலே இவ்வாறான தீப்பரவல் ஏற்படுகின்றது என்று பிரதேசவாசிகள் கூறுகின்றனர். தீ விபத்து ஏற்பட்டு பல மணிநேரம் கடந்தும் தீயை அணைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-இ)




## இருக்கிறதை விட்டிட்டு..!

**கை**யில நெய்யை வைச்சுக்கொண்டு ஊரெல்லாம் வெண்ணெய்க்கு அலைஞ்ச கதையைக் கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடி யாழ்ப்பாணத்தில இப்பத்தை கல்விச் சீர்திருத்தத்துக்கு அவசியமான ஒரு 'யுனிட்டை' பூட்டி வைச்சுப்போட்டு, எங்கட கல்வித்தரம் வீழ்ச்சியடையுது எண்டு ஒப்பாரி வைச்சுக்கொண்டிருக்கிறம். யாழ்ப்பாணத்தில நாலைஞ்சு வருசத்துக்கு முந்தி 'எல்.எம்.டி.எம்.யூ.' (LMDMU) எண்டு சொன்னால் அதுக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. 2011இல சின்னதாத் தொடங்கி, 2014 இல கலாநிதி எதிர்வீரசிங்கம் ஐயாவின்ர எண்ணக்கருவில 'டிஜிற்றல் கற்றல்' எண்டு ஒரு புரட்சியையே செய்த யுனிட் அது. இலங்கையில வேற எந்த மாகாணத்திலயும் இல்லாத வசதியள் இஞ்ச இருந்தது. ஏ.எல்., ஓ.எல். படிக்கிற பிள்ளையளுக்குத் தேவையான எல்லாப் பாடங்களையும் ஈஸியா விளங்கப்படுத்துறமாதிரி சொப்ட்வெயார், வீடியோக்கள் எண்டு அந்த யுனிட் கெத்தா இருந்த காலம் அது. கொரோனா நேரத்தில பள்ளிக்கூடங்கள் எல்லாம் பூட்டுப்பட்டுக் கிடக்கேக்க, பிள்ளையள் வீட்டில இருந்தே ரீவியிலயும் யூரியூப்லயும் படிச்ச புண்ணியத்தில பெரும் பங்கு இந்த யுனிட்டுக்குத்தான் சேரும்.

இலங்கையிலேயே மற்ற மாகாணங்களில இப்பிடியான சிஸ்டம் வரமுதலே, இஞ்சதான் இந்த யுனிட்டை தொடங்கி அதை வெற்றிகரமாவும் நடத்தினவை. ஆனால் இப்ப புதுக் கல்விச் சீர்திருத்த நேரத்தில தான் 'எல்.எம்.டி.எம்.யூ.' யுனிட் இன்னும் அவசியம். ஆனால் பொறுத்தநேரத்தில, ரண்டு வருசத்துக்கும் மேலா அதை ஏன் பூட்டி வைச்சிருக்கினம் எண்டது புரியாத புதிர் தான். யுனிசெப் நிறுவனம் குடுத்த நவீன வீடியோக் கமராக்களும், எடிட்டிங் கொம்பியூட்டர்களும், ஸ்டோரேஜ் மிஷின்களும் இப்பப் பெட்டியளுக்குள்ள கிடந்து வெளியில வரமுடியாமல் 'மூச்சுத் திணறிக்' கொண்டிருக்குதுகள். இப்பிடி வருசக்கணக்கில உந்த விலை உயர்ந்த இலத்திரனியல் பொருள்களைப் பாவிக்காம வைச்சிருந்தால் அதுகள் தானாவே பழுதாப் போடும் எண்ட சின்ன விசயம் கூட எங்கட அதிகாரிமாருக்குத் தெரியாதோ?

ஒரு பக்கம் 'சிஸ்டம் சேஞ்ச்' , 'டிஜிற்றல் கல்வி' எண்டு மேடையில முழங்குகினம். ஆனா, கையில எல்லா வளத்தோடையும் இருந்த, காலத்துக்குத் தேவையான ஒரு பிரிவை மூடிட்டு, இவையள் எப்பிடிப் புதுக்கல்வி மறுசீரமைப்பைக் கொண்டுவரப்போகினம்? 2026இல வரப்போற புதிய பாடத்திட்டத்துக்கு இப்பவே மென்பொருள்கள் தயாரிக்கோணும், ஆசிரியர்களுக்கு ஏ.ஐ. நுட்பங்களைச் சொல்லிக்குடுக்கோணும். அதுக்கெல்லாம் 'எல்.எம்.டி.எம்.யூ.' யுனிட் ஒரு அட்சய பாத்திரம். தேவையானதையெல்லாம் உடனுக்குடன செய்யிறதுக்கு இப்ப அந்த யுனிட்தான் அவசியம். அனால் அதைப் பூட்டி வைச்சுப்போட்டு இனிமேல் கொழும்பில இருந்துதான் எங்களுக்குத் தேவையான வீடியோ, சொப்ட்வெயார் எல்லாம் செய்துவரு மட்டும் அணிலேறவிட்டபடி நாங்கள் பாத்துக்கொண்டிருக்க வேணும்.

கோடிக்கணக்கான பெறுமதியான இந்த அரச சொத்துகளைப் பாவிக்காமல் வீணாக்குறதும் பெரும் 'குற்றம்' தான்! ஆளணி இல்லை எண்டால் அதுக்கு உரிய ஒழுங்குகளைச் செய்யுங்கோ. தமிழ்மொழி மூலம் படிக்கிற கனக்கப் பிள்ளையள் இன்னமும் 'எல்.எம்.டி.எம்.யூ.' யுனிட் செய்த யூரியூப் வீடியோக்களைப் பார்த்துப் படிச்சு நல்ல மார்க்ஸ் எடுக்கினம். எங்கட வடபுலக் கல்விக்குக் கிடைச்ச ஒரு வரப்பிரசாதத்தை இப்பிடி நாங்களே மண்ணுக்குள்ள புதைக்கிறது நியாயமில்லை. உரியவை விழிச்சுக்கொண்டு இந்த அலகை மீண்டும் இயங்க வைச்சால் எங்கட பிள்ளையளின்ர எதிர்காலத்துக்குப் புண்ணியமாப் போகும். இல்லாட்டி, 'இருக்கிறதையும் விட்டிட்டுப் பறக்கிறதைப் பிடிக்கிற' கதையாத்தான் முடியும் கண்டியளோ.

padsi@uthayan.com

-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையால் சிறுவர்கள் கல்வியை இழக்கக்கூடாது

## ஆளுநர் தெரிவிப்பு



ரம்ழான் பண்டிகைக்கால சிறப்புத் தொழுகை வழிபாடுகளும் நோன்பு திறப்பு நிகழ்வும் பருத்தித் துறையிலுள்ள பள்ளிவாசலில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நோன்பு திறப்பு நிகழ்வு மற்றும் தொழுகை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச–100)

**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**சிறுவர்களுக்குப் பாதுகாப்பான எதிர்காலத்தையும் ஒளிமயமான வாழ்வையும் அமைத்துக் கொடுப்பது ஒரு மாகாணத்தின் நிர்வாகம் மற்றும் சமூகத்தின் முதன்மைக் கடமையாகும் என்று வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற 'சிறுவர் நலன் மற்றும் பாதுகாப்பு 2026' சிறப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில், பெற்றோர் ஒருவரை அல்லது இருவரையும் இழந்த சிறுவர்கள் அதிகளவில் உள்ளனர். இவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் விசேட தேவைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

வறுமை காரணமாக எந்தவொரு சிறுவனும் தனது கல்வியை இழந்து விடக்கூடாது என்பதில் சமூகம் அதீத அக்கறை காட்டவேண்டும்.

தற்காலச் சூழலில் சிறுவர்களை இலக்குவைத்து அதிகரித்துவரும் சமூகச் சீர்கேடுகள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தல்கள் குறித்து அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும்- என்றார். (ச-66)

# INVITATION FOR BIDS

## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.**
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Document Issuing/Purchasing Period** | | | | **From 04.03.2026 until 17.03.2026** | | | | |
| | | **Pre-Bid Conference** | | | | **At 10.30 A.M on 10.03.2026** | | | | |
| | | **Closing and Opening of Bids** | | | | **At 10.30 A.M on 18.03.2026** | | | | |
| 1 | PSDG/NP/MU/MEPS/2026/CWS/01 | Construction of Community RO Plant & Building at Ampalpuram Manthai East Ps | PSDG Fund | 2.54 | 63 | C9 or above (Building) | 3,000.00 | 05-May-2026 | 38,500.00 | 16-June-2026 |
| 2 | PSDG/NP/MU/MEPS/2026/RE/01 | Purchasing & Fixing Of Solar Power Street Lights-Manthai East Ps | PSDG Fund | 1.69 | 49 | Sustainable Energy Authority (SEA) Registration | 3,000.00 | 05-May-2026 | 25,500.00 | 02-June-2026 |
| 3 | PSDG/NP/MU/MEPS/2026/OS/01 | Construction of Shopping Complex at Karumpullijan | PSDG Fund | 3.33 | 63 | C9 or above (Building) | 3,000.00 | 05-May-2026 | 50,000.00 | 16-June-2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, e.mail: psmanthaieast@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) **S/No from 01 to 04** must be delivered to the **Chairman, Manthai East and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam on or before** 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's represen tatives who choose to attend at **Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.**
7. Pre-Bid Conference will be held at Conference Hall, **Manthai East Pradeshiya Sabha, Pandiyanku-lam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam,
Naddankandal.

04.03.2026

# பெற்றோலின் விலை அமெரிக்காவில் 'கிடுகிடு'

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உக்கிரமடைந்துள்ள போர் மோதல்கள் காரணமாக, அமெரிக்காவில் பெற்றோல் விலை கடந்த நவம்பர் மாதத்துக்குப் பின்னர் முதல் முறையாக ஒரு கலன் 3 டொலரைக் கடந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்குப் பதிலடியாக ஈரான் நடத்திய பதில் தாக்குதல்கள் காரணமாக, சர்வதேச எண்ணெய் விநியோகத்தின் முக்கியமான பாதையான 'ஹோர்முஸ் நீரிணை' ஊடான கப்பல் போக்குவரத்து மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நெருக்கடி நிலையால் உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை 5 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இதன் நேரடித்தாக்கம் அமெரிக்க நுகர்வோரைப் பாதித்துள்ளதுடன், அங்கு பெற்றோல் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது. தற்போதைய பதற்றமான சூழல் நீடித்தால், இந்த வார இறுதிக்குள் அமெரிக்காவில் பெற்றோல் விலை ஒரு கலனுக்கு 3.25 டொலர் வரை மேலும் அதிகரிக்கக்கூடும் என பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

# ஈரானில் நிலநடுக்கம்

ஈரானின் கெராஷ் பிரதேசத்தில் நேற்று 4.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. ஏற்கனவே போர்ப் பதற்றத்தால் தத்தளித்து வரும் இந்தப் பிராந்தியத்தில், நிலநடுக்கம் மேலதிக அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நிலநடுக்கத்தால் பெரிய அளவிலான சேதங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்பட்டதாகத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கண்கெட்ட பிறகா கியூ. ஆர். முறைமை?

2023ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இப்போது மீண்டும் நாட்டில் எரிபொருள் வரிசைகள் தோன்றியிருக்கின்றன. எரிபொருள் தட்டுப்பாடு வரக்கூடும் என்ற வெறும் ஊகத்தின் அடிப்படையில் இன்று மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், மக்களை எவரும் குறைகூற முடியாது. நேற்றைய நாடாளுமன்ற உரையில் ஜனாதிபதியும் இதனை வழிமொழிந்து, மக்களின் அச்சத்தைப் புரிந்துகொண்டு பேசியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், வெறும் புரிதலோ அல்லது ஆறுதல் வார்த்தைகளோ தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வாகாது.

கடந்த சிலநாள்களில் மட்டும், பலமாதங்களுக்குத் தேவையான எரிபொருள் நாடு முழுவதும் விற்றுத் தீர்ந்துள்ளது. மக்களின் வழமையான தேவையில் எவ்வித மாற்றமும் ஏற்படாத நிலையில், இந்த திடீர்க் கொள்வனவு அதிகரிப்பு தெளிவான ஒரு பதுக்கல் நடவடிக்கை என்பதை எவரும் மறுக்கமுடியாது. சமூகத்தில் உள்ள 20 சதவீதமானோர் தங்களின் சுயநலத்துக்காகச் செய்யும் இந்தப் பதுக்கல், அன்றாடம் எரிபொருள் நிரப்பிச் செல்லும் 80 சதவீதமான பொதுமக்களை வீதியில் நிறுத்தியுள்ளது. கையிருப்பில் போதிய எரிபொருள் உள்ளது என்ற அரசாங்கத்தின் அசட்டுத் தைரியம், உண்மையில் பதுக்குபவர்களுக்குச் சாதகமாகவே முடிகிறது. விநியோகத்தை அதிகரிப்பது மட்டும் தீர்வாகாது, விநியோகிக்கப்படும் எரிபொருள் சரியான முறையில் நுகர்வோரைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிப்பதே அரசாங்கத்தின் கடமை என்பதை நினைவுபடுத்த வேண்டியிருக்கின்றது.

நெருக்கடிக் காலங்களில் எரிபொருள் விநியோகத்தைச் சீர்செய்யவதற்கு கியூ.ஆர். முறைமை கடந்தகாலத்தில் கைகொடுத்திருந்தது. இது எரிபொருள் பதுக்கலைத் தடுப்பதோடு, ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான அளவில் எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்தது. தற்போது, பதுக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று அரசாங்கம் எச்சரித்தாலும், அது நடைமுறையில் எந்தளவுக்குச் சாத்தியம் என்பது கேள்விக்குறியே. அதற்குப் பதிலாக, கியூ.ஆர். முறைமையை மீண்டும் கொண்டுவருவதன் மூலம் இயற்கையாகவே பதுக்கலைத் தடுக்கமுடியும் என்ற நிலையில், கியூ.ஆர். முறைமையை மீண்டும் நடைமுறைப்படுத்தக் காட்டும் தயக்கம் சற்றுப் புதிரானதே.

அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுவது போல, தட்டுப்பாடு ஏற்பட்ட பின்னர் கியூ.ஆர். முறையைப் பரிசீலிப்பது என்பது காலங்கடந்த செயலாகிவிடும். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல் உலகளாவிய எரிபொருள் விநியோகத்தில் எப்போது வேண்டுமானாலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இத்தகையதொரு நிச்சயமற்ற சூழலில், கையிருப்பில் உள்ள எரிபொருளை மிகச் சிக்கனமாகவும், முறையாகவும் கையாள்வதே ஒரு புத்திசாலித்தனமானது. தற்போது எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்ற அசட்டுத்தைரியத்தில் அல்லது எதிர்க்கட்சிகளின் வாய்க்கு அவல் கிடைத்துவிடும் என்ற அச்சத்தில் அரசாங்கம் தடுமாறினால் அது பின்னர் பெருங்கேடாக மாறிவிடவும் கூடும். நெருக்கடிகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டுமானால், அரசாங்கம் இப்போதே சூதானமாகச் செயற்பட வேண்டியது கட்டாயம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற**

**பொருள்:** பெறத் தகுந்த பேறுகளில், அறியவேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர மற்றப் பேறுகளை யாம் மதிப்பதில்லை.




# ஏப்ரல் மாதத்திலிருந்து 'ரின்' இலக்கம் கட்டாயம்

**கொழும்பு, மார்ச் 4**
**இலங்கையில் எதிர்வரும் 2026 ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முக்கியமான பல நிதி மற்றும் பொதுச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வரி செலுத்துவோர் 'ரின்' சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

2026ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரிச் (திருத்தச்) சட்டத்தின் கீழ் இந்தப் புதிய நடைமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்தில் புதிய வங்கிக்கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் கடனட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல், கட்டட வரைபடங்களுக்கான உத்தியோகபூர்வ அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல், மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல், காணி அல்லது காணி உரிமத்தைப் பதிவுசெய்தல், புதிய வணிகப்பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பங்குகளைப் பரிமாற்றுதல் போன்வற்றை இனி 'ரின்' இலக்கமின்றிப் பெற்றுக்கொள்ளமுடியாது. நாட்டின் வரி வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும், நிதிப்பரிமாற்றங்களில் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் அரசாங்கம் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது. வர்த்தமானி அறிவித்தலின் படி, வங்கி மேலாளர்கள், பதிவாளர்கள், மாகாண அல்லது பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட அதிகாரிகள், தத்தமது சேவைகளை வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரரின் 'ரின்' சான்றிதழைச் சரிபார்க்க வேண்டியது கட்டாயமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## காங்கேசன்—நாகபட்டினம் கப்பல் சேவை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 4
காங்கேசன்துறைக்கும், நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சுபம் கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.
இந்தக் கப்பல் சேவை அசாதாரண காலநிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் எதிர்வரும் 6ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
அதற்கமைய வழமைபோல் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய ஆறு நாள்களும் குறித்த கப்பல் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பங்குச்சந்தை திடீர்ச் சரிவு!

கொழும்பு, மார்ச் 4
கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்து விலைச் சுட்டெண்களிலும் 5 சதவீதத்தை விட அதிகமான அளவு சரிவு ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து பங்குச்சந்தையின் வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. அதன் படி, தற்காலிகச் சந்தை நிறுத்தத்தைத் தொடர்ந்து கொழும்பு பங்குச் சந்தையின் வழக்கமான வர்த்தகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பங்குச்சந்தை அறிவித்துள்ளது. (ச-இ)

## நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கம்பளை இல்லவதுர பகுதியில், மகாவலி கங்கையில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கம்பளைப் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-இ)



## ருமேனியா நாட்டுடன் தொழில் ஒப்பந்தம்!

இலங்கை - ருமேனியா நாடுகளுக்கு இடையிலான தொழிலாளர் உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.
ருமேனியாவின் தொழிலாளர், குடும்பம், இளைஞர் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் பெட்ரேப்ளோரின் மனோலைச் சந்தித்த போதே இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொழிலாளர் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் சட்டரீதியான புலம்பெயர்வுக்கான பாதைகளை உருவாக்குதல். வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கான தொழில்பாதுகாப்பு மற்றும் பயிற்சிகள் தொடர்பான விடயங்களும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - மாசி 21
05.03.2026
சுபநேரம் : 07.56 - 09.26
ராகுகாலம் : 01.56 - 03.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் பின்னர் சுவீகரிக்கப்பட்ட மக்கள் காணிகளை விடுவிக்குக!

## வடக்கு ஆளுநர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**வடக்கில் போரால் மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலகட்டத்தில், அவர்கள் மீளத் திரும்புவதற்கு முன்னதாக, எவ்வித களநிலை ஆய்வுகளோ அல்லது கலந்துரை யாடல்களோ இன்றி, வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம், சுவீகரிக்கப்பட்ட காணிகளை உடன் விடுவிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்தார்.**

தேசிய சுற்றாடல் சட்டவரைவுத் திருத்தம் தொடர்பான அறிவூட்டல் மற்றும் கருத்துக்கேள் கலந்துரையாடல், சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக பதபெந்தியின் பிரசன்னத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், வடக்கு மாகாணத்தை நோக்கி பல முதலீட்டாளர்கள் வருகைதருகின்றனர். ஆனால், அவர்கள் தமக்கான முதலீட்டு அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் இன்றும் பல அதிகாரத்துவச் சவால்களை எதிர்கொள்கின்றனர். அனுமதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயன்முறையை நாம் விரைவு படுத்தாவிட்டால், முதலீட்டாளர்கள் விரக்தியடைந்து திரும்பிச் செல்லும் நிலையே ஏற்படும்.

இந்த அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் ஏற்படுத்தும் தாமதங்கள் மற்றும் தடைகள் இயலுமான வரை விரைவாகக் களையப்பட வேண்டும். அதேவேளை சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன வடக்கு மாகாணத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றன. போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலகட்டத்தில், அவர்கள் மீளத் திரும்புவதற்கு முன்னதாகவே எவ்வித களநிலை ஆய்வுகளோ அல்லது மக்கள் கலந்துரையாடல்களோ இன்றி, வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம், அவர்களது காணிகள் இந்தத் திணைக்களங்களால் சுவீகரிக்கப் பட்டுள்ளன.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதற்குத் தீர்வுகாணும் நோக்கில் தற்போதைய அரசாங்கம் ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அந்தச் செயன்முறைகளை மேலும் துரிதப்படுத்தி, மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதார நிலங்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். இதே வேளை, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் திண்மக் கழிவகற்றல் என்பது தற்போது பெரும் சவாலாக மாறியுள்ளது. அதற்கான நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை களுக்கும் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். என்றார். (க–113)

உ
சிவமயம்

## சிவாச்சார்யாபிஷேக அழைப்பிதழ்

(குருப்பட்ட அபிஷேகம்)

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விசுவாவசு வருஷம் மாசி மாதம் 21ம் நாள்
(05.03.2026) வியாழக்கிழமை துதியைத் திதியும்
அத்த நட்சத்திரமும் கூடிய பகல் 10.33 முதல் 12.32
வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புதல்வன் எமது இளைய சகோதரன்
**பிரம்மஸ்ரீ ஸ்ரீநிகேத சர்மா**
**ஸ்ரீமதி – பிரதீபா** தம்பதிகளுக்கு

விஷேஷ நிர்வாண தீக்ஷையும் சிவாச்சார்யாபிஷேகமும் செய்ய
குருவருளும், ஸ்ரீபத்திர காளியம்பாள் சமேத வீரபத்திரப் பெருமான்
திருவருளும்கூடியுள்ளதால்
**கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரர் ஆலய மண்டபத்தில்** நடைபெறும்.
மேற்படி வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து
ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ இ.பிரணதார்த்திஹரகுருக்கள்
குடும்பத்தினர்
ஸ்ரீ.பிரணதி
ஸ்ரீ.பிரத்யும்னன்

வீரபத்திரர் கோயில்,
கோப்பாய்.

(AJA/1999)(11.18)

மார்ச்
6, 7, 8
2026
medicare
BMICH
கொழும்பு

குழந்தைப்பேற்றுக்கான அதிநவீன சிகிச்சைகளுடன் தற்போது இலங்கையில்...

RPIFC
## ரோயல் பிரசாந்த் கருத்தரிப்பு மையம்

62, W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை
infosl@prashanthivf.com www.prashanthivf.com

பல ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை

IVF சிகிச்சையில் ரூ. 60,000 தள்ளுபடி

முதல் IUI சிகிச்சைக்கு ரூ. 10,000 தள்ளுபடி

ரூ. 10,000 மதிப்புள்ள Scan மற்றும் SFA பரிசோதனைகள் இலவசம்

எங்களைச் சந்தித்து எங்கள் சிறப்பு சலுகைகளை பெறுங்கள்



எமது தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

IVF | ICSI | IMSI விபரங்களுக்கு: 0754000012

**பெண்களுக்கு**
- PCOD
- எண்டோமெட்ரியோசிஸ் நாரிழைகள், குழாய் அடைப்பு
- ஹிஸ்டராஸ்கோப்பி / 3D லாப்ராஸ்கோப்பி
- எம்பிரியோஸ்கோப்
- எம்பிரியோ க்ளு
- சைட்டோபிளாஸ்மிக் டிரான்ஸ்பர்
- பிஆர்பி (Platlet rich plasma)
- பிஜிஎஸ் (Pre genetic screeing)

**ஆண்களுக்கு**
- விந்தணு பகுப்பாய்வு
- டிஎன்ஏ (DNA) சுறாய்வு
- இம்சி (IMSI)
- அஸ்ஸ்பெர்மிக்
- 40x மைக்ரோஸ்கோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவகை ஆவணத்தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் அலகினரால் தொகுக்கப்பட்ட ஐந்து ஆவணங்கள் வெளியீட்டு விழா நேற்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழத்துக் கும்மிப் பாடல்கள், சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி, மடு பிரதேச நாட்டுக்கூத்துகள், தெணியான் படைப்புகள், நெடுந்தீவின் பாரம்பரிய வாழ்வியல் (இறுவட்டு) ஆகியனவே வெளியிட்டு வைக்கப்பட்டன.

நூல்களுக்கான வெளியீட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றினார்.

மதிப்பீட்டு உரைகளை பேராசிரியர் அ. சண்முக தாஸ், பேராசிரியர் சுபதினி ரமேஷ், அருட்தந்தை செ. அன்புராசா, விரிவுரையாளர் த. அஜந்தகுமார், கலாநிதி க. ரதிதரன் ஆகியோர் ஆற்றினர். (ச- 9)



Viluthu : சமுக ஒருங்கிணைப்பாளர் (Project Work)
நிறுவனம் : விழுது
பதவி நிலை : சமுக ஒருங்கிணைப்பாளர் ( Community Mobilizer)
இடம் : முல்லைத்தீவு மாவட்டம்
பணி செய்யும் இடம் : புதுக்குடியிருப்பு கரைதரைப்பற்று
விண்ணப்பிப்பதற்கான கடைசி திகதி : 15 மார்ச் 2026
தேவையான தகுதிகள் மற்றும் திறன்கள்: சமுக ஒருங்கிணைப்பு, அபிவிருத்திப்பணி அல்லது தொடர்புடைய துறைகளில் அனுபவம். சிறந்ததொடர்பாடல் சுயமாகவும் குழுவாகவும் பணியாற்றும் திறன், அறிக்கை தயாரிக்கும் திறன்
தகைமைகள் : சமூகவியல் ( Sociology) படித்திருத்தல் வேண்டும், MS Office தெரிந்திருத்தல் வேண்டும், மோட்டார் வண்டி வைத்திருப்பவர் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்கும் முறை
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் 15 மார்ச் 2026 திகதிக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.
viluthujobs@gmail.com
மின்னஞ்சல் தலைப்பு: (Subject): Application for Community Coordinator) Mulaitheevu
Viluthu, No: 150/2, Bauddhaloka Mawatha, Colombo-04

# பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்


யாழ்ப்பாணம், மார்ச் 4

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் பொங்கல் உற் சவம் இந்த வருடமும் சிறப்பாக நடை பெறவுள்ளது என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16, 23, 30ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் 6ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் 13ஆம் திகதிகளில் பங்கு னித் திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெ றும்.

இந்த நாள்களில் அம்மனுக்குச் சிறப்புப் பூசை வழிபாடுகள் அதிகாலை 5 மணிக்கு உஷாக்காலப் பூசையுடன் ஆரம்பமாகும். காலை, மாலை அபிஷேகம், சிறப்புப் பூசை வழிபாடுகள், பொங்கல் படையல், அர்ச்சனை வழிபாடுகள் என்பன இடம்பெ றும்.

இரவு 9 மணியளவில் அர்த்தசாமப் பூசை யுடன் பங்குனித் திங்கள் பொங்கல் உற் சவம் நிறைவு பெறும். அடியவர்கள் புனித தீர்த்தக் கேணியில் நீராடி விரதமிருந்து பொங்கல், படையல், அர்ச்சனை உள் ளிட்ட நேர்த்திகள், வழிபாடுகளை நிறை வேற்றிக் கொள்ளலாமெனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-41-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகு லேஸ்வரர் ஆலயத்தில் மாசிமக விர தத் தீர்த்தோற்சவம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. நகுலேஸ்வரப் பெரு மான் சந்திரசேகர மூர்த்தியாகக் கீரி மலை கண்டகித் தீர்த்தக் கடலுக்கு எழுந்தருளி மாசிமகத் தீர்த்தோற் சவம் நடைபெற்றது. (எ-41-66)


# INVITATION FOR BIDS
# MARITIMEPATTU - PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 04.03.2026 until 17.03.2026 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 11.03.2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 18.03.2026 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 01 | PSDG/NP/MU/MPPS/2026/CWS/01 | Establishment of RO Plant at-Chemmalai Sub Office | PSDG | 1.27 Mn | 49 Days | C9or Above (Building) | 2000.00 | 05/May/2026 | 20,000.00 | 02/June/2026 |
| 02 | PSDG/NP/MU/MPPS/2026/CWS/02 | Establishment of RO Plant at-Mulliwaikkal Sub Office | PSDG | 1.27 Mn | 49 Days | C9or Above (Building) | 2000.00 | 05/May/2026 | 20,000.00 | 02/June/2026 |
| 03 | PSDG/NP/MU/MPPS/2026/OS/01 | Construction Buring Shed at Kokkuththoduwai-Cemetery | PSDG | 1.69 Mn | 49 Days | C9or Above (Building) | 2000.00 | 05/May/2026 | 26,000.00 | 02/June/2026 |
| 04 | PSDG/NP/MU/MPPS/2026/OS/02 | Construction Buring Shed at Kumarapuram Mavadipilavu - Cemetery | PSDG | 1.69 Mn | 49 Days | C9or Above (Building) | 2000.00 | 05/May/2026 | 26,000.00 | 02/June/2026 |
| 05 | MA/NP/MU/MPPS/2026/01 | Renovation of Hichrapuram Neeravipity Boundary Road | PSDG | 3.81 Mn | 77Days | C9or Above (Highway) | 2500.00 | 02/June/2026 | 58,000.00 | 30/June/2026 |
| 06 | MA/NP/MU/MPPS/2026/02 | Renovation of Sivasothi Theoter Road | PSDG | 1.27 Mn | 49 Days | C9or Above (Highway) | 2000.00 | 05/May/2026 | 20,000.00 | 02/June/2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Maritimepattu Pradeshiya Sabha,**
**Kovilkudiyiruppu, Mullaitivu**

04.03.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்குப் போர்ப்பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவர கோரிக்கை

### சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் விடுத்தது இலங்கை

கொழும்பு, மார்ச் 4



மத்திய கிழக்கில் மூண்டுள்ள போரானது உலக அமைதிக்கும், பொருளாதாரத்துக்கும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதால் அதை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலை மற்றும் எரிபொருள் விவகாரம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று விசேட ஊடகவியலாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிலேயே அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- போர் என்பது உயிரிழப்புகளையும், உடமை இழப்புகளையுமே தரும். எங்கு நடந்தாலும், எவர் நடத்தினாலும் போர் என்பதை ஒரு போதும் அனுமதிக்கமுடியாது. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் உலக அமைதி, பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் உலக பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மத்திய கிழக்கு பொருளாதாரத்துக்கு மிக முக்கியமான பகுதி. இலங்கைப் பொருளாதாரத்துக்கும் அது மிக முக்கியமானது. உலக அமைதிக்காக இலங்கை அர்ப் பணிப்புடன் செயற்படும். அந்தவகையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அனைத்துத் தரப்புகளிடமும் இலங்கை கோருகின்றது-என்றார். (ஏ-44)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ௐ



தோற்றம் 21 . 03 . 1955

மறைவு 24 . 02 . 2024

**அமரர் சேனாதிராசா இராஜரட்ணம் (கண்ணன்)**

ஆண்டுகள் இரண்டு கழிந்தது
இருப்பினும் உங்களின் அழகிய நினைவுகள்
என்றும் எம்மை விட்டு நீங்காது..!!
இப்பூவுலக வாழ்வை விட்டு
ஆதி சிவனின் அடிகளில் நிறைந்த சாந்தியைப் பெற
இவ்விரண்டாவது ஆண்டு நினைவஞ்சலியன்று
மெய்யன்போடு பிரார்த்திப்போமாக...!!

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(CS/31376) J-1

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1962

மறைவு 02 . 03 . 2026

(CS/31378) J-1

**திருமதி விக்னேஸ்வரி மோகனதாஸ்**

**(முன்னாள் வங்கி ஊழியர் - ஹட்டன் நஷனல் வங்கி)**

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, கைதடி தெற்கு, கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி விக்னேஸ்வரி மோகனதாஸ் (முன்னாள் வங்கி ஊழியர் - ஹட்டன் நஷனல் வங்கி) அவர்கள் நேற்று முன்தினம் (02.03.2026) திங்கட்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வநாயகி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற குமாரசாமி - தனபாக்கியலட்சுமி தம்பதியினரின் மருமகளும், மோகனதாஸின் அன்பு மனைவியும், துலக்ஷிகா, துலக்ஷனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, ஆறுமுகம், காலஞ்சென்ற வீமராஜன், குலராஜன், பாலராஜன், ஆனந்தராஜன், ஜெகராஜா, விக்னராஜா மற்றும் தனேஸ்வரியின் பாசமிகு சகோதரியும், ஆறுமுகநாதன், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சில்வி, பாக்கியநாயகி, இந்திரா, மனோன்மணிதேவி, செந்தில்செல்வி, நிலானி, கிருஷ்ணபவானி, மங்களமூர்த்தி, வாசுகி, பகீரதியின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05-03-2026) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 1.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, பொரளை மயானத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**கணவன், பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 03 . 1957

இறப்பு 28 . 02 . 2026

**நவரத்தினம் ரவி**

நீர்வேலி வடக்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ரவி அவர்கள் கடந்த (28.02.2026) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பூமலர் தம்பதியரின் மூத்த மகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயகலா, ஜெயவதனி, ஜெயவதி, நகுலேஸ்வரன், நிமலேஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், பத்மஜா, நவமலர், தர்மபாலன், நவராசா (கட்டார்) ஆகியோரின் மைத்துனரும், மதனராஜ் (பிரான்ஸ்), ரஜிதரன் (லண்டன்), கஜிதரன் (பிரான்ஸ்), ரஞ்சிதா (முல்லைத்தீவு), விஜிதரன், கீர்த்திகா, ஷாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசா, சுபாசினி, இந்துஜா, கேசவன், கனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சகீத்தியன், மோனிகா, நித்தீஸ், சுவஸ்திகா, வர்ணிகா, தாருகா, பவனீஸ், ரக்ஷிதா, ரக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2026) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி
மகன் -077 036 5526, மருமகன் - 077 110 7191

(CS/60898) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ மேன்மையடைய
விரும்பினால்
உன் தாய் தந்தையர்
சொல் கேட்டு
நடப்பதுடன்
அவர்களையும்

-திருவள்ளுவர்

புதன் பொய்கை

04.03.2026
புதன்கிழமை





# தேய்கிறதா தாய்மொழி?

ஒரு நாட்டின் பொதுக்கல்வி அமைப்பு அதன் மொழி அரசியல், சமூக சமத்துவம் மற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் முக்கியமான அடையாளமாகும். இலங்கை போன்ற பன்மொழி, பன்மை இனச் சூழலில், கல்வியில் மொழிக்கான இடம் என்பது ஒரு பாடவிடயம் மட்டுமல்ல அது அரசியலமைப்புச் சட்டங்களுடனும், சமூக நீதிக் கோட்பாடுகளுடனும் நேரடியாக இணைந்துள்ளது. இந்நிலையில், இலங்கையின் பொதுக்கல்வி நிலைமாற்றங்களில் தமிழ் மொழி பெற்றுள்ள இடம் ஆழமாக ஆராயப்பட வேண்டியதாக உள்ளது.

இலங்கையில் தமிழ்மொழிக் கல்வி ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், குறிப்பாக 1788 ஆம் ஆண்டுக்குள், தமிழ்மொழிப் பாடநெறிகளாக ஒழுங்குபடுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டது. இலக்கணம், மொழியமைப்பு, இலக்கியம் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி சார்ந்த உள்ளடக்கங்கள் தமிழில் கற்பிக்கப்பட்டமை, தமிழ் ஒரு சிந்தனை மொழியாகவும் கல்வி மொழியாகவும் வளர்ந்திருந்ததை வெளிப்படுத்துகிறது.
இலங்கையின் அரசியலமைப்பு, சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் என அங்கீகரிக்கிறது. மேலும், கல்வி உட்பட அரச சேவைகளில் தாய்மொழிப் பயன்பாட்டுக்கான உரிமையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அரச மொழிகள் சட்டங்கள், தமிழ்மொழி அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி எனத் தெளிவுபடுத்துகின்றன. எனினும், இந்தச் சட்ட அங்கீகாரம் நடைமுறைக் கல்விக் கட்டமைப்பில் முழுமையாக பிரதிபலிக்கப்படுகிறதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தற்கால இலங்கைச் சமூகத்தில் ஆங்கிலமொழி மூலமான கல்வியே சமூக அந்தஸ்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. முன்பள்ளி முதல் உயர் கல்வி வரை ஆங்கிலம் ஊடான கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் பெற்றோரின் மனப்பாங்கு, தமிழ் மொழிக் கல்வியை ஓரங்கட்டுகிறது. இதனால், தாய்மொழிக் கல்வி ஒரு 'மாற்று விருப்பம்' என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறது. இந்த நிலை நீடித்தால், தமிழ்மொழியின் கல்வி எதிர்காலம் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும்.

பாடசாலை மட்டத்தில் தமிழ்மொழி ஒரு பாடமாக மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகிறது. அறிவியல், கணிதம், தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஆங்கில மொழியூடான கல்வி விரிவடைவதன் காரணமாக, தமிழ் அறிவு மொழியாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. இதன் விளைவாக, தமிழ்மொழி 'மதிப்பெண் பெறும் பாடம்' என்ற அளவிலேயே பார்க்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

மேலும், உயர்தர வகுப்புகளில் தமிழ் கற்பிக்கும் தகுதியான ஆசிரியர்களின் பற்றாக்குறை ஒரு பெருஞ் சவாலாக உள்ளது. இதனால், மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, தமிழ்ப்பாடம் சிரமமானதாகவும் ஆர்வமற்றதாகவும் மாணவர்களிடையே எண்ணப்படுகின்றது. பாடசாலை நிலைமையில் உருவாகும் இந்த மொழி மனப்பாங்கு, பல்கலைக்கழகங்களிலும் பிரதிபலிக்கின்றது. யாழ்ப்பாணம், பேராதனை,



இ.பாத்திமா அப்றோஸ்
கல்வியியல் 2ஆம் ஆண்டு
சிறப்புக் கற்கை மாணவி,
பிள்ளை நலத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்

கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பாடத்தை சிறப்புப் பாடமாகக் கொண்ட பட்டக் கற்கைநெறி உள்ளது. மேலும் தமிழில் முதுமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களையும்,இலங்கையிலுள்ள மேற்படிப் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன.தமிழ் சிறப்புப் பாடநெறிகளில் மாணவர் சேர்க்கை குறைவடைவதும், ஆய்வுத் துறைகளில் தமிழ்மொழி பின்தள்ளப்படுவதும் கவலைக்குரிய விடயங்களே. இதன் விளைவாக, எதிர்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள், மொழியியல் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் உருவாகும் வாய்ப்புக் குறையும் அபாயம் நிலவுகிறது.

2026ஆம் ஆண்டுக்கான கல்விச்சீர்திருத்தங்கள், பல்மொழித்திறன், தொழில்நுட்ப அறிவு மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துகின்றன. தாய்மொழி அடிப்படையிலான ஆரம்பக்கல்வி முக்கியமானது எனக் குறிப்பிடப்பட்டாலும், நடைமுறைச் செயற்பாட்டில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் மேலும் வலுப்பெறும் அபாயம் உள்ளது. தமிழ்மொழி ஒரு பாடமாக மட்டுமல்லாது, அறிவு உருவாக்கும் மொழியாகவும் சிந்தனை வளர்க்கும் ஊடகமாகவும் பாதுகாக்கப்படவேண்டிய தேவை இந்தச்சீர்திருத்தங்களில் வலுவாகப் பிரதிபலிக்க வேண்டும்.
இலங்கையின் பொதுக்கல்வி நிலைமாற்றங்களில் தமிழ்மொழியின் நிலை இன்று ஒரு தீர்மானகரமான கட்டத்தில் உள்ளது. சட்ட ரீதியான அங்கீகாரம் மட்டுமே போதுமானதல்ல அது கல்வி நடைமுறைகளிலும் சம வாய்ப்புகளாக வெளிப்படவேண்டும். தொழில்நுட்ப முன்னேற்றமும் உலகமயமாதலும் அவசியமானவை என்றாலும், தாய்மொழியை ஓரங்கட்டும் கல்வி நிலைமாற்றம் நீடித்த வளர்ச்சிக்கு வழிவகுக்காது. தமிழ்மொழி இலங்கையின் அறிவு சார் மரபையும் சமூக அடையாளத்தையும் தாங்கிய கல்விமொழியாகும். அதனைக் கல்வி அமைப்பின் மையத்தில் நிலைநிறுத்தும்போதே உண்மையான சமத்துவமும் நிலையான கல்வி முன்னேற்றமும் சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூத்தோரை வாழவிடுங்கள்

■ உடுவிலூர்க் கலா

**'மூத்தோர் என்போர் முதுகெலும்பே நமக்கு ஏத்தித் தொழுவோம் என்றும் அவர்களை வாழ்வளித்த வரங்களை மரணம் வரை வணங்குவோம் வாயார வாழ்த்துகிறோம்.'**



மூத்தோர் நமக்கு தெய்வங்களே, வாழ்வின் வழிகாட்டிகளும் அவர்களே. இன்று எம் சமூகம் எதிர்கொண்டுள்ள தலையாய பிரச்சினைகளில் முக்கியமானது முதியோர் வாழ்வியல். வீட்டுக்கு வீடு நாம் ஆய்வு செய்தால், பெறுமதியற்றவர்களாக முதியோர் வாழ்வதைக் காணமுடியும். யார் இந்த முதியவர்கள்? இந்தக் கேள்வியை நாம் ஒவ்வொருவரும் எங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேட்கவேண்டும். நம்மைப் பெற்றவர்கள், நம் பெற்றோரைப் பெற்றவர்கள், அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோர் எனப்படுவர். ஐக்கிய நாடுகள் சாசனம் பனிநிலையிலுள்ளவர்க்களை 'மணிவிழா நாயகர்கள்' என முடிசூட்டி ஓய்வுநிலையில் வீட்டுக்கு அனுப்பும் பணியிடங்களை நாமறிவோம். அந்தவகையில் அறுபது வயதானால் அவர்கள் முதியோர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**எமக்கு இவர்கள் முக்கியமான வர்களா?**

ஆம். இவர்கள் முக்கியமானவர்கள். நம்மைப் பெற்றெடுத்துத் தூக்கம் கலைந்து வளர்த்தெடுத்து கல்வி தந்து பண்பையும் ஒழுக்கத்தையும் ஈந்து சமூகத்தின் பொருத்தப்பாடுடைய பிள்ளைகளாக கல்விச் சமூகத்தில் நிறுத்தியவர்கள். இந்த உலகத்தை நமக்குக் காட்டியவர்கள். ஆன்மிக வழியில் நடத்தியவர்கள். முன்மாதிரியாக வாழ்ந்தவர்கள். வரலாற்றின் புள்ளியை எம் பிறப்பில் இருந்தே போட்டு அழகிய கோலத்தை வரைந்தவர்கள். இவர்கள் இல்லை என்றால் நாமில்லை.

**இவர்களை எப்படி நடத்துகிறோம்?**

கல்லையும் கடவுளாக வணங்கும் எமக்கு உயிராக எம்முன் வலம் வரும் தெய்வங்கள். இவர்களை நாம் வணங்குகிறோமா? பராமரிக்கிறோமா? வீடுகளில் உரிய கௌரவம் கொடுக்கிறோமா? என்கின்ற பல கேள்விகளுக்கு விரல் விட்டு எண்ணக்கூடியவர்களை விட பலமாகக் கேட்கும் குரல் 'இல்லை' என்பதே. குழந்தையாகி, சிறுபருவமாகி, வாலைப்பருவ மாகி ,திருமணப்பருவமாகி, முதுமையாகி, மரணத்தின புள்ளியில் முடிவுறும் வாழ்க்கை என்பது எல்லோருக்கும் இயல்பானதே. ஆனால் எந்தவொரு உயிரும் தானாகப் பிறந்து தானாக வளர்ந்து தானாக வாழ்க்கையை முடிப்பதில்லை.

தாய் தந்தையரின் மகிழ்வில் ஊற்றெடுக்கும் குழந்தை ஒரு ஒட்டுண்ணியாகக் கருவறையில் இருந்து தாயானவளின் மரண வலியில் பூமிக்குப் பிறப்பெடுத்து குறை ஒட்டுண்ணியாகிறது. தாயின் அன்பும் தந்தையின் அறிவும் மனித வாழ்வியலைச் செதுக்க வாழ்க்கைத்துணை சேர்கிறது. இதன் வழி பிள்ளைகள் பெற்றோராகின்றனர். இங்கே எல்லா உறவுகளுமே ஒட்டி உறவாடியே முதுமைக்குப் பயணிக்கின்றன. இதில் யாவரும் விதிவிலக்கல்ல.

**இன்றைய முதியோரின் நிலை**

இன்று அநேகமான பெற்றோர் வலிகள் சுமந்த வண்ணமேயுள்ளனர். பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு வயிற்றுப் பசியோடும் நோய்களோடும், தனிமை, வெறுமை போன்றவற்றோடும் உயிர் போகாதா? ஏன் இந்த நிலை? என்ற விடை கிடைக்காத வினாக்களோடு ஒவ்வொரு வினாடிகளையும் கடக்கின்றனர். இந்த நிலை ஏன்? இது நியாயமானதா? மனச்சாட்சியுள்ள யாரும் இப்படியான துர்ச்செயல்களைச் செய்யமாட்டார்கள்.

**கண்ணீர் ஒவ்வொரு மனிதனின் வாழ்வியலுக்கான சாபம்.**

**சில அவலக்காட்சிகள்**

ஆண்பிள்ளை அதுவும் மூத்த பிள்ளைதான் பெற்றோரைப் பார்க்கவேண்டும் என்ற நியதியும், தங்களுடைய சொத்துகளை எந்தப் பிள்ளைக்குக் கொடுத்தார்களோ அந்தப் பிள்ளையே பார்க்க வேண்டும் என்ற நியதியும் பரவலாக குடும்பங்களில் சதிராடுகின்றன. இதனால் முதியோர் இல்லங்கள் நிரம்பிவழிகின்றன, பேருந்துச் சாலைகள், ஆலய வளாகங்களில் அநாதரவாகக் குந்தியிருக்கின்றனர் படைப்பின் தெய்வங்கள். பெண் பிள்ளை வீட்டில் ஆண்பிள்ளையின் வீட்டு உணவுக்காகக் காத்திருந்த தாயையும், வீட்டின் ஓரத்தில் குந்தியிருந்து மருமகளின் வசை பாடலைக் கேட்கும் மாமியையும் இருக்கின்ற ஒரு ரூபாவைக் கூட பெற்றுக் கொண்டு கட்டிக்கொடுத்த வீட்டில் இருக்கவிடாது கலைத்த மகள்-மருமகனையும், பிள்ளையைக் கவனமாக பார்ப்பதற்காக வேலைக்காரியாகத் தாயை வைத்திருக்கும் அரச பணி நிலைப் பிள்ளைகளையும் கொண்டதே இன்றைய எங்கள் சமூகம்.



வாழ்க்கை மரணத்தை நோக்கி ஓடுகிறது. இளமை காணாமற்போகும் சந்தர்ப்பங்கள் பல உண்டு. முதுமை வரம் முதுமையைத் தரிசிக்காமலே மரணித்துப் போவோர் துர்ப்பாக்கியசாலிகள்.

**கோயில் கட்டுவதை விட, பெற்றவர்களின் வயிறு காயாமல் உணவிடுங்கள். அதுவே போதும்!**

ஆகவே ஒவ்வொரு முதுமையையும் கொண்டாடவேண்டும். நன்றோ தீதோ முதுமையில் தான் வாழ்வியலின் அறுவடை தேட்டமாகிறது. அனுபவங்கள் கனதியாகின்றன.

வாழும் காலத்தில் பெற்றோரை அநாதரவாக விட்டு மரணவீட்டைக் கோலாகலமாகச் செய்யும் வேடதாரிகள் இப்போது பல்கிப் பெருகியுள்ளனர். கோயில்களைக் கட்டுவதோ, அன்னதானம் செய்வதோ தேவையில்லை. பெற்றவர்களின் வயிறு காயாமல் மனம் நோகாமல் உணவைக் கொடுங்கள். நிம்மதியாகப் படுத்துறங்க பாதுகாப்பான இடம் கொடுங்கள் அதுபோதும். என்னதான்பிள்ளைகள் தீமை செய்தாலும் அவர்களின் குறைகளை யாருக்கும் சொல்லமாட்டார்கள் பெற்றோர். பெற்றோர் என்றும் பெற்றோரே.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சென்று பார்த்தால் இத்தகைய அவலம் முதியோருக்கு இருந்ததில்லை. முதியோர் முதுசொம்களாகப் போற்றப்பட்டவர்கள். எங்களுடைய இலக்கியங்களில் கூடக் கிழவன் கிழத்தி எனத் தலைமைத்துவம் கொண்டிருந்தார்கள். ஆனால் காலச் சுழற்சியில் பாரிய வீழ்ச்சி முதியோருக்கு ஏற்பட்டுள்ளது என்று புலம்பெயர் நாடுகளின் அகதிக்கதவுகள் திறக்கப் பட்டனவோ இன்று தொடங்கியது முதியோர் அவலம். புலம்பெயர் வாழ்க்கை பின்னாளில் பிள்ளைகள் இல்லாத தனிமையைத் தாராளமாகக் கொடுத்துள்ளது.

ஆக பெற்றோரின் கண்ணீர் ஒவ்வொரு மனிதனின் வாழ்வியலுக்கான சாபம் என்பதை உணரவேண்டும். 'உன் தந்தையையும் தாயையும் கனம் பண்ணுவாயாக' என்கிறது விவிலியம். இவ்வாறு பெற்றோரை முன்னுறுத்தியே இலக்கியங்களும் உள்ளன. அவ்வாறு இருக்க எப்படிப் பெற்றோரை அந்நியர்களாகப் பார்க்கமுடிகிறது?எப்படி அவர்களை ஓரங்கட்ட முடிகிறது? என்ன பெருங் கேள்விகளாகவே உள்ளன. இனிமேலாவது ஒவ்வொரு மனிதனும் முதியோர் வாழ்வியலில் அக்கறை கொள்ளவேண்டும். முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் இளவயதுக் கர்ப்பமும்!

■ பொ. ராஜரத்தினம் (JP)

**ஒரு நாட்டின் உயிருள்ள சொத்தாகக் கருதப்படுவது அந்த நாட்டின் சிறுவர்கள்தான். ஆனால், இலங்கையின் தற்போதைய சமூக நிலைவரம் அந்தச் சொத்துகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறதா? தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரசபை வெளியிட்டுள்ள அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரங்கள் நம்மைத் தலைகுனிய வைக்கின்றன.**



**அதிகரிக்கும் இளவயதுக் கர்ப்பங்கள்: ஒரு சமூகப் புற்றுநோய்**

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025இல் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் கர்ப்பமடைவது சடுதியாக அதிகரித்துள்ளது. 2024இல் 53 ஆக இருந்த இந்த எண்ணிக்கை, 2025இல் 79 ஆக உயர்ந்துள்ளது. இது வெறும் இலக்கமல்ல; 79 சிறுமிகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் எதிர்காலக் கனவுகளின் சாவுமணி. சிறுவர் திருமணங்கள் சற்றே குறைந்திருந்தாலும் (14 இலிருந்து 9 ஆக), முறைசாரா உறவுகள் மற்றும் விழிப்புணர்வின்மையால் ஏற்படும் இந்தக் கர்ப்பங்கள் ஒரு கவலைக்குரிய சமூகச் சிக்கலாகும்.

**ஒன்லைன் அச்சுறுத்தல்: டிஜிற்றல் உலகில் வேட்டையாடப்படும் சிறுவர்கள்**

தொழில்நுட்ப வளர்ச்சி சிறுவர்களுக்கு வரமாக அமைவதற்குப் பதில், சாபமாக மாறிவருகிறது. நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவதாக மிரட்டி, சிறுவர்களை அச்சுறுத்திய சம்பவங்கள் தொடர்பாக கடந்த ஆண்டில் மட்டும் 150 வழக்குகள் பதிவாகியுள்ளன. அறைகளுக்குள் பாதுகாப்பாக இருப்பதாக நாம் நினைக்கும் நமது பிள்ளைகள், இணையத்தின் வழியாகச் சமூக விரோதிகளிடம் சிக்கிக்கொள்கின்றனர்.

**போதைப்பொருள் மற்றும் கைவிடப்படும் குழந்தைகள்**

- 16 சிறுவர்கள் சட்டவிரோதப் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தவிக்கவிட்டு, பெற்றோர் வெளிநாடுகளுக்குச் சென்ற சம்பவங்கள் 9 பதிவாகியுள்ளன. இது அந்தக்குழந்தைகளின் உளவியலில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தும்.
- 32 சிறுவர்கள் ஒரு நாட்டின் பிரஜை என்பதற்கான அடிப்படை ஆதாரமான பிறப்புச் சான்றிதழ் இன்றி அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**வன்கொடுமைகளின் கோர முகம்**

கடந்த ஆண்டில் மட்டும் 10,455 சிறுவர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 545 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களும், 231 நேரடிச் சிறுவர் துஷ்பிரயோகங்களும் பதிவாகியுள்ளன. இதில் மிகக் கொடுமையான விடயம் என்னவென்றால், 627 சிறுவர்களுக்கு அவசர உளவியல் ஆலோசனை தேவைப்படும் அளவிற்கு அவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நாம் செய்யவேண்டியது என்ன?**

- பாலியல் கல்வி மற்றும் தற்காப்பு குறித்த விழிப்புணர்வைப் பாடசாலை மட்டத்திலேயே கட்டாயமாக்கவேண்டும்.

- சிறுவர் குற்றவாளிகளுக்கு எவ்விதத் தயக்கமுமின்றி உச்சகட்டத் தண்டனைகளை வழங்கச் சட்டங்கள் திருத்தப்படவேண்டும்.

- ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் சிறுவர்களுக்கான பிரத்யேக உளவியல் ஆலோசனை மையங்கள் அதிகரிக்கப்படவேண்டும்.

- பிள்ளைகளின் இணையப் பயன்பாட்டைப் பெற்றோர் முறையாகக் கண்காணிப்பதோடு, 'சைபர் பாதுகாப்பு' குறித்த அறிவை அவர்களுக்குப் புகட்டவேண்டும்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது என்பது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல; அது ஒரு சமூகமாக நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். எமது பிள்ளைகள் அச்சமின்றிச் சுவாசிக்கக்கூடிய ஒரு தேசத்தை உருவாக்க நாம் இன்று விழித்துக்கொள்ளாவிட்டால், நாளை எமது சந்ததியின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாகவே எஞ்சும்.

## தற்கொலை

தோல்வி கண்டு துவண்டிட வேண்டாம்
துன்பம் கண்டு துடித்திட வேண்டாம்
நாளை சூடிடும் வெற்றிகள் இருக்கு
நம்பிக்கை உன்னில் வளர்ப்பது சிறப்பு

தோல்வியின் நண்பன் தற்கொலை என்று
தோற்றிட பலரது நிலை இதுதானே
சாதல் என்பது தீர்வும் அல்ல
சரியென எடுக்கும் முடிவும் அல்ல

வாழப் பிறந்த வாழ்க்கை இதுவே
இன்பம் துன்பம் எல்லாம் பொதுவே
தோல்வி எவரையும் தொடர்வதும் இல்லை
வெற்றி என்றும் சுமப்பதும் இல்லை

இரவும் பகலும் மாறுதல் போலே
இன்பமும் துன்பமும் வருதல் இயற்கை
இன்பத்தில் சிரித்து துன்பத்தில் அழுவது
இதுதான் மனிதா உந்தன் செயற்கை

கருவறை முதலே அழுதவனும் இல்லை
கல்லறை வரைக்கும் சிரித்தவனும் இல்லை
காலம் புகட்டும் பாடம் இதுதான்
கற்றுக்கொண்டால் வாழ்க்கை அதுதான்

ஆண்டிட பிறந்த ஆறறிவு ஜீவனே
ஐந்தறிவு ஜீவனிடம் தோற்பது நியாயமோ
பறவைக்கும் விலங்கிற்கும் தற்கொலை இல்லை
பாவமோ உன்செயல் நியாயமோ இல்லை


எதிர்நீச்சல் போட்டிடும் மீனைப் பாரீர்
எதையும் தாங்கியே இலக்கை சேரீர்
தன்னம்பிக்கை பலம் கொண்டு தற்கொலை தவிர்ப்பீர்
தளர்வில்லா மனம் கொண்டு எதையும் வெல்வீர்....

**நிரூஷா முத்துக்கிருஷ்ணன், சாவகச்சேரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் பிரகாசித்த கலாநிதி எஸ்.கே.பிரபாகரன்

சு.ஶ்ரீகுமரன் SLEAS I



கல்வித்துறையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சுடர்விட்டுப் பிரகாசித்த கலாநிதி எஸ்.கே.பிரபாகரன் தனது அரச பணியில் இருந்து மார்ச் 2ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார். 1966 மார்ச் மாதம் 3ஆம் திகதி வடமராட்சி வியாபாரி மூலையில் பிறந்த கதிர்காமத்தம்பி பிரபாகரன் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், ஹாட்லிக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்று முதலிடம் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர்ந்த அவர் 1991இல் தொழில்நிர்வாகமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அவ்வேளை யாழ்ப்பாணத்தில் கணக்கியல் ஆசிரியராக பல தனியார் கல்விநிலையங்களில் பணியாற்ற ஆரம்பித்து குறுகிய காலத்திலேயே பிரபலம் பெற்றார். அக்காலத்தில் எஸ்.கே.யிடம் கணக்கியல் படிக்காதோர் யாருமில்லை என்னுமளவுக்கு யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்து பிரபல ஆசிரியராக மிளிர்ந்தார். 1995 இடப்பெயர்வின் பின்னர் கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய இடங்களிலும் தனியார் கல்விநிலையங்களில் கற்பித்து சிறந்த கணக்கியல் ஆசிரியராகப் பிரகாசித்தார்.

1993இல் உடுவில் மகளிர் கல்லூரியில் கணக்கியல் பாட ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் கொழும்பு உவெஸ்லிக் கல்லூரி, பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றிலும் கற்பித்தார். கற்பிக்கும் காலத்தில் வடமராட்சிக் கல்வி வலயம், கொழும்பு கல்வி வலயம் ஆகியவற்றின் வளவாளராகவும் விளங்கி பல வழிகாட்டல் கருத்தரங்குகளையும் முன்னெடுத்திருந்தார்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி, கல்வியியலில் முதுதத்துவமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுக்கொண்ட இவர் கணினி மற்றும் சர்வதேச ஆங்கில மொழியிலும் கற்கைகளை நிறைவுசெய்துள்ளார்.

2008ஆம் ஆண்டு இலங்கையின் கல்விக் கொள்கையினை, கலைத்திட்டத்தை உருவாக்குகின்ற தேசிய கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகப் பணியில் இணைந்து கொண்டு, அங்கு விரிவுரையாளராகவும் பணியாற்றியதுடன் வணிகத்துறைக் கலைத்திட்ட வடிவமைப்பிலும் முக்கியமான பங்காற்றினார். 2013இல் கலைத்திட்டச் சட்டக வடிவமைப்புக்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. 2020இல் சிரேஷ்ட விரிவுரையாளராக உயர்ந்த இவர் தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் விரைந்து செயற்பட்டு தமிழில் குருகுலம் கல்வி ஒளிபரப்பினை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தியதன் மூலமாக தமிழ் மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதத்தினை ஏற்படுத்தினார். குருகுலம் அரச தொலைக்காட்சியில் நேர அட்டவணைப் பிரகாரம் நடத்தப்பட்டது. நாடு தழுவிய வகுப்பறை முறைமை என அழைக்கப்படும் இந்தத் தொலைக்காட்சியூடான கல்வி ஒளிபரப்பு மேலைநாடுகளிலும், இந்தியாவிலும் வழக்கில் இருந்தபோதும் கொரோனாக் காலத்திலேயே இலங்கையில் இது தாக்கம் மிக்கதாக உருவாக்கப்பட்டது. தமிழ் மாணவர்களுக்கு இலத்திரனியல் கற்றல் மூலங்களை குருகுலம் வழங்கியது. அத்துடன் Channel NIE மூலமாக யூரியூப் வழியாக இன்றளவும் சகல வகுப்பு மாணவர்களும் அதனைப் பயன்படுத்தமுடிகிறது. இதற்கென நாடு முழுவதும் உள்ள சிறந்த வளவாளர்கள் பயன்படுத்தப்பட்டு கற்பித்தல் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் ஒளிப்பதிவுக் கலையகம் நிறுவப்பட்டு இணைப்பாளரும் நியமிக்கப்பட்டிருந்தார். இவையெல்லாம் எஸ்.கே.பிரபாகரனால் அக்காலத்தில் தமிழ் மாணவரின் கற்றல் கருதி மேற்கொள்ளப்பட்ட முக்கியமான செயற்பாடாகும்.

2021இல் தேசிய கல்வி நிறுவகத்தின் அச்சிடல் மற்றும் பதிப்பகத்துறையின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் அவ்வாண்டே ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டார். ஓய்வுபெறும் வரை அவர் அப்பதவியினை அலங்கரித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், புதிய கல்விச்சீர்திருத்த உருவாக்கத்துக்கும் வசதிப்படுத்துநராக விளங்கினார்.

இவ்வாறு வணிகத்துறைக் கல்வி மேம்பாட்டுக்காகவும், தமிழ்மொழி மூலமான கற்றல் விருத்திக்காகவும் வளவாளராகவும், விரிவுரையாளராகவும், ஆய்வாளராகவும் இவர் ஆற்றிய பங்களிப்பு விதந்து கூறத்தக்கது. கலைத்திட்ட உருவாக்கத்தில் தமிழ்ப் பண்பாடு, விழுமியங்கள், உணர்வுநிலை சார்ந்து இவர் தனது கருத்துகளை முன்வைத்த வகையிலும் அதன் உள்ளடக்க நிறைவுக்கு இவர் பங்களித்துள்ளார். இவரது சேவையினை ஓய்வுபெறுகிற இந்நாள்களில் கல்வியுலகம் நன்றியோடு நினைவுகூர்கிறது.




## இலக்கியப் பேரண்டப் பயணிப்பு

# 'குருத்தோலை சிரிக்கிறது'

*கவிதைத்தொகுதியை முன்வைத்து ஒரு பார்வை*

அமரர் பொலிகை செ.யோகராஜாவின் கவிதை உலகிற்குள் நுழைவதென்பது, ஒரு புதிய இலக்கியப் பேரண்டத்திற்குள் பிரவேசிப்பதைப் போன்றது. அந்த உலகத்தை வாசித்து முடித்த பின்பும், அங்கிருந்து வெளியேற மனமின்றி ஒருவித ஆத்மார்த்தமான திருப்தியில் திளைக்கமுடிகிறது. வானையும் நிலவையும் மட்டுமே பாடிப் பழகிய கற்பனைச் சிறைக்குள் சிக்கிக்கொள்ளாமல், யதார்த்த உலகின் நிதர்சனங்களை உற்றுநோக்கிய கவிஞரின் தீர்க்கமான பார்வை அவரது ஆளுமைக்கு மகுடம் சூட்டுகிறது. தூய்மையான எண்ணங்களின் அறுவடையாக, வார்த்தை அலைகளாய் வாசகர்கள் முன்னே வந்துவிழும் இவரது கவிதைகள், வெறும் எழுத்துகளல்ல; அவை காலத்தின் சாட்சியங்கள். வாழ்க்கையின் நிலையாமை மற்றும் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட மர்மங்களை ஒரு விஞ்ஞானப் பார்வையோடும் தத்துவ ஞானத்தோடும் அணுகியிருப்பது, அவரது திரிகால ஞான சிந்தனைக்குக் கட்டியம் கூறுகிறது.

மரபுக்கவிதைகள் மெல்ல விடைபெற்று, புதுக்கவிதைகள் ஆதிக்கம் செலுத்தும் இன்றையச் சூழலில், மானிட தர்மத்தையும் நீதியையும் மிக எளிமையான நடையில் வாசகன் உள்ளத்தில் விதைக்கும் வல்லமை இவருக்கு இயல்பாகவே கைவந்திருக்கிறது. போர்க்காலச் சூழலில் நாதியற்று வீதிதோறும் அலைந்த எமது மக்களின் அவலங்களை, ஒரு கவிக்கண்ணாடி கொண்டு நம் மனக்கண்ணில் நிழலாடச் செய்கிறார். அதே சமயம், போதைக்கு அடிமையாகித் தெருவில் தடுமாறும் மனிதர்களைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாமல், "போதையிலே காலந்தனைக் களியாதே மனிதா! புத்திகெட்டு தெருவில் நின்று ஆடாதே மனிதா!" என்று அவர் விடுக்கும் அறைகூவல், பாதை மாறிய சமூகத்திற்கு நேர்வழி காட்டும் ஒளியாகத் திகழ்கிறது. ஏழ்மையின் பிடியில் சிக்கி, விலையேற்றத்தின் சுமையைத் தாங்கமுடியாமல் தவிக்கும் சாமானியனின் வலியை யதார்த்தமாகப் பதிவு செய்யும் கவிஞர், குடும்பத்துக்காக ஓடாகத் தேயும் உழைப்பாளிகளின் இன்னல்களைக் கருணைக் கண்கொண்டு உற்றுநோக்குகிறார்.

கவிஞரின் படைப்பாற்றலின் சிகரமாக 'தனிமையிலே' என்ற கவிதை அமைகிறது. வாழ்வின் அந்திமக் காலத்தில், முதுமையின் பிடியில் சிக்கி உறவுகளால் கைவிடப்பட்ட ஜீவன்களின் மௌன அழுகையை அவர் வெளிப்படுத்திய பாங்கு தனித்துவமானது. தனிமைச் சிறையில் வாடும் முதியவர்களின் வலியை அவர் தனது கவித்தளத்தில் நின்று விவரிக்கும்போது, படிப்பவர் கண்கள் கசியத் தொடங்குவது தவிர்க்க முடியாதது. மொத்தத்தில், அமரர் பொலிகை செ. யோகராஜாவின் 'குருத்தோலை சிரிக்கிறது' என்ற கவிதைத் தொகுப்பானது, வெறும் காகிதங்களின் தொகுப்பல்ல; அது தற்கால இலக்கிய உலகிற்குப் பொலிகை மண்ணிலிருந்து கிடைத்த ஓர் உன்னத வரப்பிரசாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பில் ஒருபோதும் ஒற்றையாட்சிக்கு இடமளியோம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 4

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 'ஏக்கிய ராஜ்ய' (ஒற்றையாட்சி) அரசியலமைப்பு வரைவுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. "ஒற்றையாட்சிக்கு ஒருபோதும் இடமில்லை" என்ற கோஷத்துடன், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி நாம் நகரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவைக் குழுவினர் நடத்திய சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஒற்றையாட்சி முறைமையைக் கொண்ட அரசியலமைப்பை நிலைநிறுத்த முயற்சிக்கின்றது. தமிழ்த் தேசத்தின் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைந்த ஒரு சமஷ்டி யோசனையையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே மன்னார் மாவட்டத்தை மையப்படுத்திச் செயற்படும் பல்வேறு பொது அமைப்புகள் மற்றும் அதன் தலைவர்கள், தமிழ் மக்கள் பேரவையின் இந்த முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். ஒற்றையாட்சி யாப்பு வரைவுக்கு எதிராகத் தமிழ் மக்களை அணிதிரட்டுவதே தற்போதைய பிரதான நோக்கம். மக்களின் உண்மையான அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கிய ஒரு மாற்று யோசனையைத் தயாரிப்பதில் மன்னார் மக்களின் பங்களிப்பு மிக அவசியம் - என்றார். (ச-60)

# மரண அறிவித்தல்



## திருமதி கஜேந்தினி தவபாலன்

நாவற்குழியை பிறப்பிடமாகவும் ஆனந்தா வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கஜேந்தினி தவபாலன் அவர்கள் நேற்று (03.03.2026) செவ்வாயக்கிழமை காலமானார்.

அன்னார் தவபாலனின் அன்பு மனைவியும், பஞ்சலிங்கம் - சகுந்தலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் மகாமதி தம்பதியரின் மருமகளும், சுஜேந்தினி, தயாளினி, அருண்பிரசாந், லகீசன் காலஞ்சென்ற சர்மிளா ஆகி யோரின் சகோதரியும், நிறோஜா, முரளிதரன், தர்சன், சபேசன், வகீசன், ஜெயக்குமார், சுரேன் ஆகியோரின் மைத்துனியும், கேதீஸ்வரனின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

T.P: 077 923 7715

குடும்பத்தினர்.

(CS 31380) A

# தூதரகம் மீது தாக்குதல்; ட்ரம்ப் கடும் கொதிப்பு

நியூயோர்க், மார்ச் 4



சவூதியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கான பதில் விரைவில் அமெரிக்காவால் வழங்கப்படும் என்றும், அது எவ்வகையான பதில் என்பது அப்போது தெரியவரும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ரியாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் தாக்கப்பட்ட செய்தி வெளிவந்த பின்னர் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை அபுதாபியிலுள்ள அமெரிக்கத் தளம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்கப் படையினர் 160 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஈரான் தெரிவித்துள்ளது. (எ-இ)

# அமெ. படையினரின் உயிரிழப்பு அதிகரிப்பு

நியூயோர்க், மார்ச் 4

ஈரானின் தாக்குதல்கில் அமெரிக்கப் படையினர் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் இணைந்து தாக்குதலை தொடங்கின. அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈரான், மேற்காசிய நாடுகளில் உள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்களை இலக்குவைத்து தாக்கி வருகின்றது.

ஈரானில் பொதுமக்கள் உட்பட நூற்றுக் கணக் கானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. அதேபோல் ஈரான் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# INVITATION FOR BID 2026/03 VALIKAMAM EAST PRADESHIYA SABHA NORTHERN PROVINCE

1. **The Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the pro jects will be funded via **PSDG**
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authorit y (CIDA) in the field of Highway and Building construction for grad e mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below** in 6 and inspect the Procurement documents at the same place on any working days from **2026.03.04 To 2026.03.18** during **09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a w ritten application to the **Chairman** Valikamam East Pradeshiya Sabha, Puttur **(TP: 021 205 8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee,** Valikamam East Pradeshiya Sabha, Puttur **on or before as stated in table below.** Bid number must be written on the left hand upper co rner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre Bid Conference will be held at **Conference Hall**, Valikamam East Pradeshiya Sabha, Puttur **as st ated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026-03- 04 To 2026-03-18 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026-03-11 |
| Closing and Opening of Bids | At 02.00 P.M on 2026-03-19 |

| Bid ID | Description of Work | Estim ated Cost (Rs.) In Million (without VAT) | Cont ract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/ 2026/OS/01 | Construction of Access Path & Burning Shed for Anthiranai Cemetery | 2.96 | 60 | C9 or above (Building & Highway) | 2,000.00 | 30,000.00 | 04.06.2026 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.

04/03/2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியில் பலியாவதே தலைமைத்துவம்

மெழுகானது தன்னையே உருக்கி பிறருக்கு ஒளி கொடுக்கிறது. உப்பு தன்னைக் கரைத்து உணவுக்குச் சுவையூட்டுகிறது. ஒரு தலைவனின் வாழ்வும் அத்தகைய தியாகம் நிறைந்ததாக இருக்கவேண்டும். பிறருக்காகத் தன்னையே இழக்க முன்வரவேண்டும். இயேசு அவ்வாறே வாழ்ந்து காட்டினார். தம் சீடர்களையும் அப்படியே செயற்படப் பணித்தார். "உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்".

(மத் 20:28)

எதை எடுக்கலாம் என்று சிந்திக்கும் மனிதர்கள் நடுவே எதைக் கொடுக்கலாம் என்று நினைப் பவரே உண்மையான தலைவர். தன்னலத்தை முன்னிறுத்திய அதிகாரத்தேடலை அறவே வெறுக்க அழைப்பு விடுக்கும் இயேசு, கிறிஸ் தவர்களின் தலைமைத்துவம் என்பது அதிகாரப் பகிர்வு அல்ல பணிப்பகிர்வே என்பதைத் தெளிவுபடுத்துகிறார். தலைமைத்துவம் என்பது இறைவனால் அருளப்படுவது என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்தால் இயேசு விரும்பிய இறையாட்சி இம்மண்ணில் மலரும். பணி புரியும் தலைமைத்துவத்தை ஏற்கும் இறைவரம் வேண்டுவோம்.

யே.சுபீட்சன்
கொழும்புத்துறை

# INVITATION FOR BID 2026/03
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via **PSDG**
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Highway and Building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-03-04 To 2026-03-18** during **09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman**, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P: 021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2026-03- 04 To 2026-03-18 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-03-11 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02.00 P.M on 2026-03-19 | | | | |
| Bid ID | Description of Work | Estim ated Cost (Rs.) In Million (without VAT) | Cont ract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2026/OS/01 | Construction of Access Path & Burning Shed for Anthiranai Cemetery | 2.96 | 60 | C9 or above (Building & Highway) | 2,000.00 | 30,000.00 | 04.06.2026 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.

04/03/2026

# INVITATION FOR BIDS
## THUNUKKAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | From 04.03.2026 until 17.03.2026 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 11-March-2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 14.00 P.M on 18.03.2026 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2026/CWS/01 | Construction of a Community RO Plant & Building at Palayamurukandy | PSDG Fund | 2.54 | 84 | C9 above (Building) | 2000.00 | 5-May-2026 | 40,000.00 | 02-Jun-2026 |
| 2 | PSDG/NP/MU/TKPS/2026/RE/01 | Purchasing & Fixing of Street Lights - 08th Ward, Thunukkai PS | PSDG Fund | 1.69 | 63 | Sustainable Energy Authority (SEA) Registration | 2000.00 | 5-May-2026 | 30,000.00 | 02-Jun-2026 |
| 3 | PSDG/NP/MU/TKPS/2026/BH/01 | Construction Of Bus Halt At Mangainagar Therankandal junction | PSDG Fund | 0.97 | 63 | C9 above (Building) | 2000.00 | 5-May-2026 | 10,000.00 | 02-Jun-2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00** hrs to **15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table**. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) **S/No from 01 To 04** must be delivered to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 14.00 P.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.**
7. Pre-Bid Conference will be held at Conference Hall, **Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Vellankulam Road,**
**Thunukkai.**
**04.03.2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வடக்கின்...

ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

நாளை, நாளைமறுதினம், எதிர்வரும் சனிக்கிழமை என மூன்று தினங்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமையவுள்ளது. இதைத்தொடர்ந்து எதிர்வரும் 14ஆம் திகதி இரு அணிகளுக்கும் இடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஆட்டம் நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட வடக்கின் போர் கிரிக்கெட் ஆட்டம், 1904ஆம் ஆண்டில் முதன்முதலில் நடைபெற்றது. இதுவரை இடம்பெற்ற 118 போட்டிகளில், சென். ஜோன்ஸ் கல்லூரி 40 போட்டிகளிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 29 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. அத்துடன், 41 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தன. மேலும், 7 போட்டிகளுக்கான முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் ஒரு போட்டி இடையில் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)



# வீழ்ந்தது ரூபா

கொழும்பு, மார்ச் 4

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 305.70 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 313.38 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)

## மாடு...

கைது செய்தனர். மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது. சந்தேகநபர்கள் இருவரிடமும் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-422)

## மத்தியகிழக்குப்...

நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் ஜனாதிபதி அநுர உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதி ஆபத்தான ஆயுதங்கள் உள்ள நவீன தொழில்நுட்ப உலகில் எந்தவொரு போரும் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சார்ந்ததாக அமையாது. எனவே, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் பேரழிவுகரமான விடயம். உலகப் பொருளாதாரத்துக்கும், அன்றாட வாழ்க்கையின் இருப்புக்கும் இது பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். எனவே, இதனால் ஏற்படும் பாதிப்பில் இருந்து இலங்கை மீள்வதற்கு நீண்டகாலம் ஆகும்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையின் காரணமாக இலங்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பல துறைகள் உள்ளன. எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம், வெளிநாடுகளில் பெருமளவு இலங்கையர்கள், சுற்றுலாத்துறை உள்ளிட்ட விடயங்களிலேயே நாம் பாதிப்புக்களை எதிர்கொள்வோம். எனவே, இந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் வழிமுறை தொடர்பில் நாம் தற்போது ஆராய்ந்து வருகின்றோம்.

இத்தகைய போரால் மக்கள் குழப்பமடைவதும், பதற்றமடைவதும் இயல்பான விடயமே. ஆதலால், மக்களைக் குறைகூறிப் பயனில்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால், மக்கள் இவ்வாறு எதிர்வினையாற்றவே செய்வார்கள். எனவே, சிறு சலனத்துக்கும் அச்சமடைகின்றனரே என்று மக்களை நொந்துகொள்ள வேண்டாம். மக்களுக்கு முழுமையான உத்தரவாதம் வழங்கினால் மட்டுமே இந்த நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இத்தகைய மோதலொன்று ஏற்பட்டது. அதன் பின்னர் அமெரிக்காவின் வரி விதிப்புகள் சுமையை ஏற்படுத்தின. டித்வா புயலாலும் அழிவை எதிர்கொண்டோம். எனினும், இதுவரை எமது பொருளாதாரத்தை மேம்பட்ட நிலையிலேயே வைத்திருக்கின்றோம். அதுபோல், இந்த நெருக்கடியையும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு மிகையாகவே உள்ளது.

நாட்டின் எரிபொருள் களஞ்சியங்கள் தற்போது விரிவாக்கம் செய்யப்படுகின்றன. எரிவாயுக் களஞ்சிய சாலையில் போதுமான இருப்பைப் பேணமுடியாத நிலைமை உள்ளது. இதுவே எரிவாயு நெருக்கடிக்குக் காரணம். எனினும், அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நீண்ட காலத்துக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ளவும், குறுகியகால நெருக்கடிகளைத் தணிக்கவும் தேவையான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இந்த நோக்கை அடைவதற்காக அமைச்சுகளும் அரச அதிகாரிகளும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அரச பொறிமுறை முழுமையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அரசியல் ரீதியான ஆதரவை வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும் - என்றார். (அ-ம-இ)

## ஸ்ரீலங்கா...

கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே, ஜனாதிபதி அநுரவிடம் விசேட விவாதம் தொடர்பான கோரிக்கையை அவர் முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போரால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் விசேட கலந்துரையாடல் அவசியம். கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்புகளுக்கும் இதற்கான அழைப்பு விடுக்கப்பட வேண்டும். அதேவேளை, ஈரான் மீதான தாக்குதல் ஐ.நா. சாசனத்தை மீறும் செயலாகும். அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதேபோல், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி, கட்டார் உள்ளிட்ட நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதலையும் கண்டிக்கின்றோம் - என்றார். (அ-ம-44)

## நிரப்பு...

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள வரிசைகளை இல்லாது செய்யும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்துக்கு இன்று மண்ணெண்ணெய் விநியோகமும் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-17)

## நான்கு...

தற்கு ஆர்வம்காட்டி வருகின்றனர். யாழ்ப்பாணத்தின் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோலுக்கு நீண்ட வரிசைகள் உள்ளன. இதையடுத்தே, சீரான விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த நான்கு நாள்களில் மட்டும் யாழ்ப்பாணத்துக்கு ஏழரை லட்சம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வழமையாக ஐந்துலட்சம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்படும் நிலையிலேயே 7 லட்சத்து 45 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-17)

## திருத்தந்தை...

மேற்கொண்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க, திருத்தந்தை லியோவை இலங்கைக்கு வருமாறு அழைக்கும் ஜனாதிபதியின் கடிதத்தை வத்திக்கான் பிரதிநிதியிடம் ஒப்படைத்துள்ளார். இதையடுத்தே, திருத்தந்தை லியோ விரைவில் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம)

## கடற்றொழிலுக்குச்...

நேற்றுத் தேடல் பணிகள் இடம்பெற்றன.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆவளையை சேர்ந்த தனிக்சன் என்பவரது படகில் சென்ற அமல்ராஜ் (வயது-36), விஜகுமார் (வயது-30) ஆகிய இரு மீனவர்களுமே இவ்வாறு காணாமற் போயுள்ளனர்.

இது தொடர்பில் படகு உரிமையாளர் தெரிவித்ததாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழிலுக்காகச் சென்ற இருவரும், மறுநாள்வரை கரை திரும்பாததைத் தொடர்ந்து பொலிஸாரிடம் முறையிட்டதுடன், தேடல் பணிகளையும் தீவிரப்படுத்தியிருந்தோம். இதன்போது, கடலில் திசைமாறி சென்ற காரணத்தால் எண்ணெய் முடிந்த நிலையில் தத்தளித்ததாகவும் தாம் எண்ணெய், மற்றும் உணவு என்பவற்றை வழங்கி அனுப்பிவைத்ததாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். எனினும், தற்போதுவரை அவர்கள் கரை திரும்பவில்லை. இதையடுத்து தீவக கடல் மற்றும் மன்னார் கடலில் தேடுதலைத் தொடர்ந்து வருகின்றோம். எரிபொருள் தட்டுப்பாடான நிலையில் தேடுதல் நடவடிக்கையைத் தொடர்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன - என்றார். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்டது ஹோர்முஸ்; போர் விரிவாகும் அபாயம்



**தெஹ்ரான், மார்ச் 4**

**சர்வதேச வர்த்தகத்தில் முக்கியமான பங்குவகிக்கும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் அதிகாரபூர்வமாக மூடியுள்ளது.**

ஹோர்முஸ் நீரிணை ஊடாக பயணிக்க முயற்சிக்கும் எந்தவொரு கப்பலும் ஈரானியப் படைகளின் இலக்காகக் கருதப்படும் என்றும், அவைமீது கடுமையான தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது.

"எமது இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவாலுக்குப் பதிலடியாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" என ஈரான் ஆயுதப் படைகள் தரப்பிலிருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

உலகளாவிய மசகு எண்ணெய் விநியோகத்தில் இந்த நீரிணை முக்கியமான பங்குவகிப்பதால், இதன் மூடல் சர்வதேசச் சந்தையில் பெரும் பொருளாதார அதிர்வுகளை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. அயதுல்லா அலி கொமேனியின் மறைவைத் தொடர்ந்து, ஈரான் கடும் பதில் தாக்குதல்களை நடத்திவருகின்றது. அதேபோன்று இஸ்ரேலும், அமெரிக்காவும் ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருகின்றன. தற்போது நீரிணை மூடப்பட்டுள்ளமையானது, பிராந்தியத்தில் ஒரு முழு அளவிலான போர் வெடிப்பதற்கான அறிகுறியாகவே பார்க்கப்படுகிறது. (எ-இ)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையங்களுக்கு வேலையாட்கள் தேவை.

* விற்பனையாளர் * கணக்காளர்

T.P: 077 71 11 025
077 99 11 025
076 77 99 262

(CS 60800)A

**A/L 2028 Online Classes**

| Physics | Chemistry |
| --- | --- |
| 076 54 630 54 | 077 30 122 88 |
| A.Jenukananth | A.Divulagananth |
| B.Sc.Eng(Hons) | B.Sc.Eng(Hons) |

University of Moratuwa

English & Tamil Medium

Starting on 06th March

(CS 31381)A



'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசிய செயற்பாட்டுக்கு இணைந்த வகையில் விஷ போதைப் பொருளைத் தடுப்பதற்கான வாரத்தை முன்னிட்டு நேற்றுத் தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பிரதேச செயலக அதிகாரிகளினால் அறிவித்தல் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (ச-28,9)

கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய மாணவன் சத்தீஸ்வரன் டினோஜன், அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தேசியமட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ச-113)



# மத்திய கிழக்குப் போர்ப்பதற்றம் 57 விமானசேவைகள் இரத்து!

கொழும்பு, மார்ச் 4

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 57 விமானசேவைகள் நேற்றைய தினமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, நாட்டிலிருந்து வெளியேறவிருந்த 28 விமானப் பயணங்களும், நாட்டுக்கு வருகைதரவிருந்த 29 விமானப் பயணங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, இன்று 4 விமானப் பயணங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. மத்திய கிழக்குக்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் விமானங்கள், அதேபோன்று அந்தப் பிராந்தியத்தின் ஊடாக ஏனைய இடங்களுக்குப் பயணிக்கும் விமானங்கள் தொடர்ந்தும் தற்காலிகமாக இரத்துச்செய்யப்பட்டுள்ளன என்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## 1ம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கணேசன் சென்ரர்
ஆஸ்பத்திரி முன்பாக
கே.கே.எஸ்.வீதி, இணுவில் மேற்கு,
இணுவில்.

கடந்த மாசி 01ம் திகதி 13.12.2025 வியாழக்கிழமை
அமரபக்க பிரதமை திதி அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர்**
**செல்வமலர் சிவகுமாரன்**


எங்கள் குடும்ப குல விளக்கே, எங்கள் வீட்டில்
இருள் சூழ்ந்து காலம் ஒரு வருடம் நகர்ந்தது...
ஆனால் எங்கள் கண்ணீர் மட்டும்
அந்த நாளிலேயே நின்றது.
உங்கள் நிழல் இன்னும் இந்த வீட்டின் சுவற்றில்
தங்கியிருக்கிறது...
உங்கள் குரல் இன்னும் எங்கள் இதயத்தின்
ஆழத்தில் ஒலிக்கிறது...
நீங்கள் மண்ணில் இல்லாவிட்டாலும்,
எங்கள் மூச்சின் இடையே இன்னும் நீங்கள்..
சென்ற இடம் தெரியாமல் தேடுகின்றோம்!!!

**குடும்பத்தினர்.**
**077 104 2841**

(CS 31379)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1958



மறைவு 03 . 03 . 2026

**தாமோதரம்பிள்ளை தேவதாஸ்**

**(உரிமையாளர் - Thash Hardware Stores, Vavuniya)**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுன்னாகம் மற்றும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தேவதாஸ் அவர்கள் நேற்று (03.03.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் மனோண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தி அவர்களின் அன்புக் கணவரும், ஜதீஸ் (Thash Hardware, Vavuniya), குகதீஸ் (Mahindra Ideal Finance, Chunnakam), தனுஷா (ZEO, Valikamam), வாகீஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிந்தாமணிதேவி, முருகதாஸ் (லண்டன்), தவராசா (தாஸ் இரும்பு களஞ்சியம் - திருநெல்வேலி), ரகுபதி (கனடா), தனபால் (Thash Hardware, சுன்னாகம்) ஆகியோரின் சகோதரனும், கையிலைவாசன் (சுவிஸ்), மணிவண்ணன், தயாளன் (சுவிஸ்), நிர்மலா (கனடா), தமிழினியன் (கனடா), உதயணன் (கனடா), நவநீதன் (கனடா), அருளாளன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் சுன்னாகம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

17/03, கதிரமலை வீதி,
சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஜதீஸ் (மகன்) - 077 611 0063
குகதீஸ் (மகன்) - 077 7799 298

(CS 31383)A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org